# மெட்ரோ ரயில் பாதைக்கு மண் பரிசோதனை



மெட்ரோ ரயில் பணிக்காக, மண் பரிசோதனை நடக்கிறது. இடம்: அடையாறு.

**சென்னை, அக். 25–**

மாதவரம் – சிறுசேரி, 'சிப்காட்' இடையே, கலங்கரை விளக்கு சந்திப்பில் இருந்து அடையாறு, இந்திரா நகர் வரை, 10 கி.மீ., மெட்ரோ ரயில் சுரங்கப் பாதை பணி மேற்கொள்ள, மண் பரிசோதனை நடைபெறுகிறது.

சென்னை மெட்ரோ ரயில், 2வது திட்ட பணிக்காக, 85 ஆயிரம் கோடி ரூபாய் செலவில், மூன்று வழித்தடங்களில், 107.55 கி.மீ., பாதை அமைக்கப் பட உள்ளது.

மாதவரம் – சிறுசேரி சிப்காட் இடையே, 45.81 கி.மீ., துாரம் ஒரு பாதையும்; மாதவரம் – சோழிங்கநல்லுார் இடையே, 44.62 கி.மீ., துாரம் மற்றொரு பாதையும்; கோயம்பேடு – கலங்கரை விளக்கம் இடையே, 17.12 கி.மீ., துாரம் மூன்றாவது பாதையும் அமைக்கப்பட உள்ளன.

இந்த பாதையில், 930 மீட்டர் இடைவெளியில், 116 நிலையங்கள் கட்டப் பட உள்ளன. இத்திட்டத்திற்கு தேவையான நிலம் கையகப்படுத்தும் பணி, வேகமாக நடைபெற்று வருகிறது.

மாதவரம் – சிறுசேரி சிப்காட் பாதையில், அடையாறு, இந்திரா நகரில் இருந்து சிறுசேரி சிப்காட் வரை, ஓ.எம்.ஆர்., சாலை மையப்பகுதியில் பில்லர் அமைத்து, ரயில் பாதை அமைக்கப்படுகிறது.

இந்த பாதை பரிசோதனைக்கான மண் எடுக்கும் பணி, 50 சதவீதம் முடிவடைந்துள்ளது. கலங்கரை விளக்கில் இருந்து அடையாறு, இந்திராநகர் வரை, 10 கி.மீ., துாரத்திற்கு, சுரங்கத்தில் ரயில் பாதை அமைக்கப்படுகிறது.

இதற்காக தற்போது, சாலை மட்டத்தில் இருந்து, 150 அடி ஆழம் வரை தோண்டி, மண் பரிசோதனை பணி நடைபெற்று வருகிறது.

ஒவ்வொரு, 5 அடி ஆழத்தில் இருந்தும், பரிசோதனைக்கான மண் எடுக்கப்படுகிறது. 75 அடி நீளத்திற்கு ஒரு இடம் தேர்வு செய்து, 425 இடங்களில் மண் பரிசோதனை செய்யப்படுகிறது.

தற்போது, கிரீன்வேஸ் சாலை, அடையாறு, எல்.பி., சாலை பகுதியில் மண் பரிசோதனை செய்யப்படுகிறது. இந்த பணி, நான்கு மாதங்கள் நடைபெறும் என, கூறப்பட்டுள்ளது.